# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

| | | | |
|---|---|---|---|
| மலர் : 6 | இதழ்: 11 | ஆகஸ்ட் : 2022 | ரூ.20/- |
| Volume: 6 | Issue: 11 | August : 2022 | Rs.20/- |




**SHRI MAHA MERU MANDALI TRUST**

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14

# வேதபாரதி

மற்றும்

## ஸ்ரீ மஹா மேரு மண்டலி

இணைந்து நடத்தும்

# பௌர்ணமி பாராயணம்

# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

**சக்தி வேதபாரதி, புதுவை**

**11.08.2022 வியாழக்கிழமை**

இடம் :

**ஸ்ரீ B. கணேசன் அவர்கள் இல்லம்**

1, முதல் மெயின்ரோடு, திருமலை தாயார் நகர்,

மூலக்குளம், புதுவை - 605010.

தொடர்பு : **94869 17766**

---

**ஆவணி 13, செவ்வாய் 10.09.2022**

**நேரம் : மாலை 6.00 மணி**

இடம் :

**அருள்மிகு ஸ்ரீ காரணீஸ்வரர் கோயில்,**

சைதாப்பேட்டை, சென்னை.

**அனைவரும் வருக! இறையருள் பெருக!!**

---

மேலும் தொடர்புக்கு

**9443495950 / 9444060346 / 9444132926**

# வேதபாரதி
## செய்திகள்




**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

## வேதமந்திரம் - 35

**யமேவைஷ வ்ருணுதே[1]தே[1]ந.லப்[4]ய: |**

**-காட[2]கோ[1]ப[1]நிஷத்**

**பொருள் :**

எவன் ஆத்மாவையே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தீவிர ஆவலுள்ளவனோ அவனுக்கு மட்டும் தான் ஆத்மா கிடைக்கிறான்.

|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 6 இதழ்: 11

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 21-23
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/21-23 /
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திரா நகர்,
காமராஜபுரம், வேளச்சேரி, செ-42.
போன்: 9025864231

# புத்தகத்தின் உள்ளே

| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 6 |
| அட்டைப்பட விளக்கம் | 8 |
| ஆவணி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஔவையார் | 15 |
| ஸ்ரீமத் பாகவதம் | 16 |
| ஸ்ரீ ஆதிசங்கரர் | 18 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 21 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் வேதவாக்கு | 22 |
| தர்மத்தின் குரல் | 23 |
| குழந்தைகள் பகுதி | 24 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 31 |
| சிவ பிருந்தாதேவி | 34 |
| லண்டன் பயணம் | 37 |
| ஸ்ரீ மணவாள மாமுனிகள் | 39 |
| பசு சர்வரோக நிவாரணி | 42 |
| குரு பூஜை | 51 |

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

## ஒரு நிமிடம் உங்களோடு...

# 49. அந்திம காலம்

**'கான்ய குப்ஜ'** என்ற நகரத்தில் **'அஜாமிளன்'** என்ற ஒரு பிராமணன் இருந்தான். அவன் மிகவும் நல்லவன். எல்லா வேதங்களையும் படித்தவனாக தன் மனைவி குழந்தைகளுடன் வாழ்ந்துவந்தான். ஒரு நாள் அவன் காட்டிற்குச் சென்று சமித்துக்கள் சேகரித்துக் கொண்டு திரும்பும் வழியில் ஒரு வேசியைப் பார்த்தான். அவள்மீது மோகம் கொண்டு தன் குடும்பத்தை மறந்து அவளுடனேயே வாழ ஆரம்பித்தான். அவள் மூலம் அவனுக்கு பல குழந்தைகள் பிறந்தார்கள். அவன் தன்னுடைய கடைசி மகனுக்கு விஷ்ணுவின் பெயர்களின் ஒன்றான **'நாராயணன்'** என பெயர் சூட்டினான்.

அஜாமிளனுக்கு வயதாகி மரணம் அவனை நெருங்கியது. ஒரு நாள் அவன் உயிரை கொண்டுபோக யம தூதர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்ட அஜாமிளன் பயந்து தன் கடைசி மகனை நினைத்துக்கொண்டு 'நாராயணா' என்று சப்தமாக கத்தினான். உடனே பகவான் நாராயணனுடைய தூதர்கள் அவன் முன் தோன்றி யம தூதர்கள் அவனுடைய உயிரைக் கொண்டுபோவதைத் தடுத்தார்கள். உடனே யம தூதர்கள் 'இவன் தன் மனைவி மக்களை மறந்து வேசியுடன் வாழ்ந்த பல பாவங்களைச் செய்தவன். இவனை ஏன் காப்பாற்றுகிறீர்கள்? 'என்று கேட்டார்கள். அதற்கு நாராயணனின் தூதர்கள் 'இவன் பாபம் செய்திருந்தாலும் கடைசி காலத்தில் தன்னுடைய அந்திம காலத்தில் 'நாராயணா' என்று பகவானை அழைத்தான் அல்லவா? அதனால் அவன் எல்லா

*பாபங்களிலிருந்தும் முக்தனாகி விட்டான் என்றனர்.*

*இதைக் கேட்ட யமதூதர்கள் யமலோகம் போய் யமதர்ம ராஜாவிடம் நடந்ததைக் கூறினார்கள். விவரத்தைக் கேட்ட யமன் 'விஷ்ணுவை ஆராதிப்பவர்களிடம் கால பாசம் செயலற்றுப் போய்விடும். ஆகவே இனி விஷ்ணு பக்தர்களிடம் நீங்கள் போகவேண்டாம்' என்றானாம். அதன்பின் அஜாமிளனை விஷ்ணு தூதர்கள் மோக்ஷத்திற்கு அழைத்துப் போனார்கள் என்பது கதை.*

*ஆனால் ஸ்ரீமத் பாகவதத்தின்படி விஷ்ணு தூதர்கள் உடனே அஜாமிளனை மோக்ஷத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. அஜாமிளன் தன் தவறையும் பாபத்தையும் உணர்ந்து கங்கைக் கரைக்குப்போய் (ஹரித்துவாரில்) இருந்து யோக மார்க்கத்தை கடைபிடித்து புலன்களை அடக்கி மனதை பரமாத்மாவிடம் செலுத்தினான். அதன்பின் தன்னுடைய ஜடவுடலை நீத்து ஆன்மீக உடலைப் பெற்று காற்று மண்டலத்தின் வழியாக பகவான் விஷ்ணுவின் லோகத்தை அடைந்தான் (ஸ்ரீமத் பாகவதம் ஸ்கந்தம் 6 அத்தியாயம் 2, ஸ்லோகங்கள் 39 முதல் 46 வரை)*

*அஜாமிளன் சரித்திரம் பகவான் நாராயணனின் நாமத்தின் பெருமையை குறிக்கிறது. நாம் என்ன தவறு செய்தாலும், எவ்வளவு பாபங்களைச் செய்தாலும் பகவானின் நாமங்களை நாவில் எப்போதும் ஜபித்துக்கொண்டே இருந்தால் வேளை வரும்போது பகவான் நம்மை திருத்தி ஆட்கொள்வார்.*

*கீதையில் பகவான் இதைத்தான் கூறுகிறார்.*

**அபி சேத்ஸுது[3] ராசாரோ ப[4]ஜதே மாமநந்யபா[4]க் /**

**ஸாது[4]ரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக்[3]வ்யவஸிதோ ஹிஸ: //**

**(கீதை 9-30)**

**பொருள் :** *மிகவும் தீய நடத்தையுள்ளவனானாலும் வேறு எதிலும் நாட்டமின்றி என் பக்தனாகி என்னை வழிபடுவானேயானால், அவன் சாது (நல்லவன்) என்றே கருதப்படத்தக்கவன். ஏனெனில் அவன் பகவானை பூஜிப்பதைக் காட்டிலும் சிறந்தது வேறு இல்லை என்று தீர்மானத்துக்கு வந்தவன்.*

*எனவே நாம் எப்போதும் பகவானையே நினைத்திருப்போம்.*

**D. சூரியநாராயணன்**

**பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆசிகளுடன்**

**ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம மண்டலி, திருப்பூர்**
**மற்றும் வேதபாரதி இணைந்து நடத்தும்**
**ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம், ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம்**

நாள் : 14.08.2022,
இடம் : குமாரசாமி கல்யாண மண்டபம், திருப்பூர்
அனைவரும் வருக, வருக.

**மேலும் தொடர்புக்கு : 9952266676 / 9486392917**

**வேதபாரதி புதுச்சேரி நடத்தும்**
**ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம்,**
**ஸ்ரீ விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம்**

நாள் : 04.09.2022
இடம் : ஸ்ரீ சங்கர வித்யாலயா, ECR ரோடு, புதுச்சேரி
அனைவரும் வருக, வருக.

**மேலும் தொடர்புக்கு :**
**9842607476 / 9443337023**

# அட்டைப்பட விளக்கம்
# ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி

**ஓம் சுமுகாய நம: ஓம் ஏகதந்தாய நம: ஓம் கபிலாய நம:**
**ஓம் கஜகர்ணகாய நம : ஓம் லம்போதராய நம : ஓம் விகடாய நம:**
**ஓம் விக்னராஜாய நம : ஓம் விநாயகாய நம : ஓம் தூமகேதவே நம:**
**ஓம் கணாத்யக்ஷாய நம : ஓம் பாலச்சந்த்ராய நம : ஓம் கஜாநநாய நம:**
**ஓம் வக்ரதுண்டாய நம : ஓம் சூர்ப்பகர்ணாய நம : ஓம் ஹேரம்பாய நம :**
**ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம :**

*நம் வீடுகளில் நடக்கும் கல்யாணம் போன்ற எல்லா சுபகாரியங்களிலும், வருடம் பூராவும் நாம் கொண்டாடும் பண்டிகைகளிலும் பூஜை ஆரம்பிக்கும்போது முதலில் மஞ்சள் தூளை தண்ணீரில் கலந்து பிடித்துவைத்து அதை விநாயகராக பாவித்து மேற்கண்ட விநாயகரின் ஷோடச நாமாக்களை (16 பெயர்களை) கூறி புஷ்பத்தால் அர்ச்சனை செய்தபிறகு தான் மற்றபூஜைகளையும், விசேஷங்களையும் ஆரம்பிப்போம்.*

*இந்த ஸ்லோகத்தை அல்லது நாமாக்களை எழுதியது யார்? அல்லது கூறியது யார்? வேதங்களை ருக், யஜுர், சாம, அதர்வண என நான்கு வகைப்படுத்தி அதனால் “வேதவியாசர்’’ என்னும் பெயரை பெற்ற “வாதநாராயணர்’’ ஒரு சமயம் சனத்குமாரர்களிடம் சென்று பதினெண் புராணங்களையும் கற்றுத் தேர்ந்து அவைகளை மக்கள் எளிதாக புரிந்து கொள்ளத்தக்க விதமாக ஸ்லோக ரூபமாக அமைக்கும் இலக்கிய பணியில் இறங்கினார். ஆனால் வியாசருக்கு எண்ணிய பொருள்கள் ஒன்றும் தெளிவாகத் தோன்றவில்லை. எல்லாவற்றிலும் விக்னங்கள் தோன்றின. ஒரு ஸ்லோகத்தையாவது*

ஒழுங்காக பாட முடியவில்லை. எதை எழுதுவது என்று தெரியாமல் குழம்பினார்.

ஏன் இந்த தடுமாற்றம்? ஏன் இந்த சித்த குழப்பம். இதன் காரணம் என்ன? என்று அறிய விரும்பி சத்திய லோகம் சென்று “பிரம்ம தேவரை'' நமஸ்கரித்து விவரங்களை கூறினார். பிரம்ம தேவர் சிறிது நேரம் தியானித்து பிறகு ஞானதிருஷ்டியால் காரணத்தைத் தெரிந்துக் கொண்டு வேத வியாசரை புன்சிரிப்போடு பார்த்து “வியாசனே அநாதியாகவும், நிர்மலமாகவும், அகண்ட ஆனந்த உருவாகவும், பிராண சொரூபியாகவும் முழு முதற் கடவுளாகவும் விளங்கும் விநாயகரை முதலில் நினைத்து வணங்காததால் தான் உமக்கு இவ்வளவு மனக்குழப்பமும், இடையூறுகளும் ஏற்பட்டுள்ளது. இனியாவது அந்த யானை முகத்து விநாயகரை வணங்கி பூஜை செய்யும். அவரை பூஜை செய்ய மந்திரங்களை சொல்கிறேன் என்று கூறி மேற்கண்ட மந்திரங்களைக் கூறினார்.

பிரம்மாவின் உபதேசங்களை கேட்ட பின் வியாச முனிவர் பூலோகம் வந்து மனித, மிருக நடமாட்டம் இல்லாத ஒரு வனத்தில் விநாயகப் பெருமாளுடைய ஏகாக்ஷர மந்திரத்தை தோத்தரித்த வண்ணம் பன்னிரண்டு வருஷங்கள் கடும் தவம் இருந்தார். விநாயகர் அவருக்கு காட்சி தந்து அருளினார். அவருடைய பேரருளை பெற்றவியாச முனிவர் உலகோர் வியக்கும் வண்ணம் பதினெண் புராணங்களையும் குறைவின்றி இயற்றினார். இதிலிருந்து மேற்கண்ட ஷோடச நாமங்களை பகவான் பிரம்மாதான் முதன் முதலில் கூறினார் என்பது தெரிகிறது. பிள்ளையார் சதுர்த்தியன்று நாம்

களிமண்ணாலான பிள்ளையார் சிலையை வாங்கி அலங்காரம் செய்து பூஜிக்கிறோம். பிள்ளையார் சதுர்த்தி முடிந்ததும் அந்த பிள்ளையார் சிலையை கிணற்றில் அல்லது சமுத்திரத்தில் அதாவது பூமியில் சேர்த்துவிடுகிறோம். இதில் ஒரு தத்துவம் உள்ளது. அதாவது பூமியிலிருந்து உருவானது எதுவானாலும் அது மீண்டும் பூமிக்கே திரும்பச் செல்லவேண்டும் என்ற தத்துவம்தான் களிமண் பிள்ளையார்.

ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதத்தின் வளர்பிறை(சுக்லபக்ஷ) சதுர்த்தி அன்று ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது.

இந்த வருடம் **ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி 31.08.2022 புதன்கிழமை** சம்பவிக்கிறது. அன்றைய தினம் விரதமிருந்து விநாயகரை பூஜித்து மேன்மையடைவோம். நம் வாழ்வில் எந்த இடையூறும் ஏற்படாது.

**D. சூரியநாராயணன்**

**வேதபாரதியின் உறுப்பினர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும்**

**இனிய**

**75-ம் ஆண்டு**

**சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்.**

## சுபக்ருது வருஷம் - ஆவணி மாத விசேஷங்கள்

**(ஆகஸ்ட் 17.08.2022 முதல் செப்டம்பர் 17.09.2022 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *17.08.2022* | ஆவ *1* | புதன் | சஷ்டி |
| *19.08.2022* | ஆவ *3* | வெள்ளி | கோகுலாஷ்டமீ |
| *22.08.2022* | ஆவ *6* | திங்கள் | ஏகாதசீ |
| *24.08.2022* | ஆவ *8* | புதன் | பிரதோஷம் |
| *26.08.2022* | ஆவ *10* | வெள்ளி | அமாவாஸை |
| *30.08.2022* | ஆவ *14* | செவ்வாய் | ஸாம உபாகர்மா |
| *31.08.2022* | ஆவ *15* | புதன் | விநாயகர் சதுர்த்தி |
| *02.09.2022* | ஆவ *17* | வெள்ளி | சஷ்டி |
| *03.09.2022* | ஆவ *18* | சனி | துர்வாஷ்டமி |
| *06.09.2022* | ஆவ *21* | செவ்வாய் | ஏகாதசீ |
| *07.09.2022* | ஆவ *22* | புதன் | வாமன ஜயந்தி |
| *08.09.2022* | ஆவ *23* | வியாழன் | பிரதோஷம் |
| *10.09.2022* | ஆவ *25* | சனி | பௌர்ணமி |
| *11.09.2022* | ஆவ *26* | ஞாயிறு | மஹாளைய பட்ச ஆரம்பம் |
| *13.09.2022* | ஆவ *28* | செவ்வாய் | சதுர்த்தி |
| *14.09.2022* | ஆவ *29* | புதன் | மஹாபரணி |
| *16.09.2022* | ஆவ *31* | வெள்ளி | சஷ்டி |

### 26.08.2022 வெள்ளிக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சுபகிருது நாம ஸம்வத்ஸரே தக்ஷிணாயனே வர்ஷ ருதௌ ஸிம்ம மாஸே க்ருஷ்ணபக்ஷே சதுர்த்தச்யாம் / அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ ப்ருகு வாஸர: ஆஸ்லேஷா நக்ஷத்ர யுக்தாயாம் விசேஷண விசிஷ்டாயம் அஸ்யாம் சதுர்த்தச்யாம் / அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வர்க்கத்வய பித்ருணாம்ச அக்ஷய்ய த்ருப்த்யர்த்தம் அமாவாஸ்யா புண்யகாலே தர்ச ச்ராத்த ப்ரதிநிதி தில தர்ப்பணம் கரிஷ்யே.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. **சூரியநாராயணன்** பகுதி - 40

## அத்தியாயம் – 2
## "ஸாங்கிய யோகம்"

*சமபுத்தியோடு வாழ்ந்தால் என்ன நடக்கும் என்று அடுத்த ஸ்லோகத்தில் பகவான் கூறுகிறார்.*

**தூ₃ரேண ஹ்யவரம் கர்ம பு₃த்₃தியோகா₃த் த₃னஞ்ஜய /**
**பு₃த்₃தெ₄ள ஸரணமந்விச்ச₂க்ருபணா : ப₂லஹேதவ: //**
**(கீ 2-49)**

**புத்தியோகாத்** = *சமத்வ புத்தியோடு கூடிய,* **நிஷ்காமிய** = *கர்மத்தைக் காட்டிலும்,* **கர்ம காமிய** = *கர்மமானது,* **தூரேண அவரம் ஹி** = *மிக கீழானதே,* **புத்தெள சரணம் அன்விச்ச** = *சமபுத்தியிலே தஞ்சம் அடைக, பலஹேதவ : க்ருபணா = பலனை இச்சிக்கிறவர்கள் கீழோர்.*

*சமபுத்தியோடு செயல் புரிவதைவிட ஆசையோடு செயல் புரிவது மிகக் கீழானதே. சம புத்தியின் கண் சரணடைக. பயன் கருதுபவர் கயவர் ஆவர். யார் பலனை எதிர்பார்த்து செய்கிறானோ அவனை "கீழானவன்" என்கிறார் பகவான்.*

*ஒரு பள்ளியில் ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒரு மாணவன் தினமும் பள்ளிக்கு சீக்கிரமே வந்து தன்னுடைய பள்ளி அறையை சுத்தப்படுத்தி, எழுது பலகையையும்* ***(BOARD)*** *சுததப்படுத்தி வைப்பான். அவனை சகமாணவர்களும், வகுப்பு ஆசிரியரும், தலைமை ஆசிரியரும் புகழ்ந்து பாராட்டினார்கள். ஆனால் சில நாட்கள் கழித்து சகமாணவர்களிடம் "பார்த்தீர்களா என்னால் தான் இந்த அறைஇவ்வளவு சுத்தமாக*

இருக்கிறது" என்று கூறி அஹங்காரம் அடைந்தான். இதைக்கேட்டதும் எல்லோருக்கும் அவன்மேல் இருந்த மதிப்பு குறைந்துவிட்டது.

ஆசையை விட்டு புத்தியுடன் கர்மத்தைச் செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் கிடைக்கும் பலனில் ஆசை வைத்துக்கொண்டு கர்மத்தை செய்பவர்கள் **"கயவர்கள்"**. ஆசையுடன் செய்யும் செயல் மிகவும் இழிவானது. நல்லதை கெட்டதை வேறுபடுத்தி அறியும் சக்தியைத்தான் **"புத்தி"** என்று சொல்கிறோம்.

மனதின் சமநிலை இவ்வுலக வாழ்க்கைக்கு எப்படி துணைபுரிகிறது என்னும் கேள்விக்கு அடுத்த ஸ்லோகத்தில் பகவான் விடையளிக்கிறார்.

**பு[3]த்[3]தி[4]யுக்தோ ஜஹாதீஹ உபே[4] ஸுப்ருதது[3]ஷ்க்ருதே /**
**தஸ்மாத்[3]யோகா[3]ய யுஜ்யஸ்வ யோக[3]கர்ஸு கௌஸலம் //**

**(கீ 2-50)**

**புத்தியுக்தோ** = சமபுத்தியுடையவன், **இஹ** = இம்மையில், **உபே ஸுக்ருததுஷ்க்ருதே** = நன்மை தீமை இரண்டையும், **ஜஹாதி** = நீங்குகிறான். **தஸ்மாத்** = ஆகையினால், **யோகாய** = யோபத்தை, **யுஜ்யஸ்வ** = சேர்வாயாக, **யோக** = யோகம், **கர்மஸு** = கர்மங்களில், **கௌசலம்** = வல்லமை.

**பொருள் :** சமபுத்தியுடையவன், புண்ணியம், பாபம் இரண்டையும் இவ்வுலகிலேயே விட்டுவிடுகிறான். அதாவது அதிலிருந்து விடுபடுகிறான். நீ சமத்துவ யோகத்தில் ஈடுபட்டிரு. இந்தச் சமுத்துவரூப யோகம்தான் கடமையை ஆற்றுவதில் திறமையாகும். கர்ம பந்தத்திலிருந்து விடுபடுவதற்கு உபாயமாகும்.

பகவான் அர்ஜுனனிடம், அர்ஜுனா, மனத்தை விட்டுவிடு. புத்தியின் துணையைத் தேடு, அப்போது பயம் போய்விடும்" என்கிறார்.

ஒரு ஜவுளிக் கடையில் ஒரு விளம்பரம் **“ஒரு புடவை வாங்கினால் இரண்டு புடவைகள் இலவசம்”** இந்த விளம்பரத்தைப் பார்த்த ஒரு பெண்ணின் மனதில் ஆசை தோன்றி உடனே புடவைகளை வாங்கிவிட்டாள். சிறிது நாட்களில் புடவைகள் சாயம் போய்விட்டன. உடனே அவர் “சே புத்திகெட்டுபோய் வாங்கிவிட்டேனே” என்று புலம்பினாள்.

எந்த ஒரு செயலையும் தீர்மானிப்பது நமது புத்தியாக மட்டுமே இருக்க வேண்டும். அங்கே மனதிற்கு இடம் கொடுக்கக்கூடாது.

“மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்” / “மனம் ஒரு குரங்கு” என்று சும்மாவா சொன்னார்கள்?

கீதை தொடரும்...



# ஸ்ரீ கோகுல கிருஷ்ண கோசாலை

**கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபல் ட்ரஸ்ட்**

**(80 G Available)**

**660 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய
2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

ஊத்துக்கோட்டை, திருவள்ளுவர் - 602 023

**8940224744 / 9363111799**

## ஔவையார்

*ஒவ்வொரு மாதமும் "ஔவையார்" அருளிய* **நல்வழி** *நூலிலிருந்து மாதம் ஒன்று அல்லது இரண்டு பாடல்கள் இந்தப் பகுதியில் வெளியாகும்.*

### பாடல் 28

**உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடி நினைத்து எண்ணுவன-கண் புதைத்த**
**மாந்தர்குடி வாழ்க்கை மண்ணின் கலம்போலச்**
**சாந்துணையும் சஞ்சலமே**

**பொருள் :** *உண்பது நாள் ஒன்றுக்கு ஒரு நாழி அளவு தானியத்தால் சமைத்த உணவு. இடையில் உடுத்திக்கொள்வது நான்கு முழத்துணி எண்ணுவன எண்பது கோடி நினைவுகள். கண் புதைந்து போயிருக்கும் மாந்தர்கள் நாம். நம் வாழ்க்கையானது மண்ணால் செய்த பாண்டம் போன்றது. எப்போதும் மனச் சஞ்சலமே.*

**விளக்கம் :** *ஒருவன் எளிமையாக வாழ, ஒரு நாழி அளவு அரிசியால் சமைத்த உணவும், உடலை மறைக்க நான்கு முழத் துணியும் இருந்தாலே போதும். ஆனால் அப்படி வாழ்பவன் மனதில் நிழலாடும் எண்ணங்கள் மட்டும் எண்பது கோடியாக பெருகி துன்பத்தைத் தருகிறது. தேவையில்லாமல் வேண்டாத சிந்தனைகளையும் ஆசைகளையும் வளர்த்து கொள்வதால்தான் வாழ்க்கை முழுவதும் கஷ்டப்பட வேண்டியுள்ளது. வாழ்க்கை எளிதில் உடைந்துவிடும் மண் கலம் போலச் சாகும்வரை அவனுக்குத் துன்பம் அளிப்பதாகவே இருக்கிறது.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,** *வேளச்சேரி*

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி

பகுதி - 20

*பகவானின் அவதாரங்கள் தொடர்ச்சி.................*

**12. பகவான் எடுத்த பன்னிரெண்டாவது அவதாரம் "தன்வந்திரி"**

*அசுரர்களும், தேவர்களும் திருப்பாற்கடலை கடைந்தபோது கடலிலிருந்து பல்வேறு பொருட்களும், தெய்வங்களும் வெளிவந்தன. அப்போது தேவர்களை காப்பதற்காக பகவான் மஹாவிஷ்ணு அண்டமே பிரமிக்கும் வண்ணம் ஜோதிவடிவாக "தன்வந்திரி" ரூபத்தில் திருக்கரங்களில் சங்கு, சக்கரம், அட்டைப்பூச்சி, அமிர்த கலசம் ஆகியவற்றுடன் கடலிலிருந்து தோன்றினார். அமிர்த கலசத்தில் இருந்த அமிர்தத்தை உண்டதால் தேவர்கள் பூரண ஆயுளைப் பெற்றார்கள். அந்த காலத்தில் ஆயுர்வேத மருத்துவத்தில் வியாதி வந்த ஒருவரின் ரத்தத்தில் கலந்துள்ள கிருமிகளை அகற்றஅட்டைப்பூச்சியை பயன்படுத்தி ரத்தத்தை உறிஞ்சவைப்பார்கள். இதைக் குறிக்கும் வகையில் பகவானின் ஒரு கையில்* **"அட்டை பூச்சி"** *உள்ளது.*

*ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் 62 ஆவது ஸ்லோகம்*

**திரிஸாமா ஸாமக : ஸாம நிர்வாணம் பேஷஜம் பிஷக்/**

**ஸந்த்யாஸக்ருச்-சம : ஸாந்தோ நிஷ்ட ஸாந்தி : பராயணம் //**

*இந்த ஸ்லோகத்தில் வரும் (578)* **"பேஷஜம்"** *என்றநாமாவிற்கு* **"மருந்தாயிருப்பவர்"** *என்று பொருள்.*

*அடுத்து (579)* **"பிஷக்''** *என்றநாமாவிற்கு* **"வைத்தியராயிருப்பவர்''** *என்று பொருள்.*

*ஜீவராசிகள் அனைத்திற்கும் பகவானே உண்மையான மருத்துவர் என்பதை இந்த அவதாரம் காட்டுகிறது. (பா 1-3-17)*

**13. பகவானின் பதிமூன்றாவது அவதாரம் "மோஹினி அவதாரம்''**

*தன்வந்திரி பகவானிடமிருந்து அமிர்தம் கிடைத்த போது தேவர்களிடமிருந்து அதை அசுரர்கள் அபகரித்துக்கொண்டு போய்விட்டார்கள். அசுரர்களிடமிருந்து அமிர்தத்தை கைப்பற்றி தேவர்களுக்கு கொடுப்பதற்காக பகவான் பேரழகு வாய்ந்த மோஹினியாக அவதாரம் எடுத்தார். பகவான் பெண் வடிவமாக எடுத்த ஒரே அவதாரம் இந்த* **"மோஹினி அவதாரம்''** *மட்டுமே. (பா 1-3-17)*

**14. பகவான் எடுத்த அடுத்த பதினான்காவது அவதாரம் "ஸ்ரீநரஸிம்ஹ'' அவதாரம் :**

*மஹா பாகவதோத்தமனான ப்ரஹலாதனை ரட்க்ஷிக்கவும், ஹிரண்யகசிபுவை நிக்ரஹிக்கவும் பகவான் தன் வீரியத்தை எடுத்துக்கொண்டு மனிதனாகவும் இல்லாமல், மிருகமாகவும் இல்லாமல் எடுத்த மிகவும் அற்புதமான, ஒரு பயங்கரமான அவதாரம்தான்* **"ஸ்ரீநரஸிம்ஹ''** *அவதாரம். ஒரு சிறுவன்கூட பக்தியோடு அழைத்தால் பகவான் வருவார் என்றநம்பிக்கையை ஏற்படுத்தவே இந்த* **"ஸ்ரீநரஸிம்ஹ''** *அவதாரம். (1-3-18)*

*அவதாரங்கள் தொடரும்..*

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன் அத்தியாயம் – 3 அவதார மஹிமை பாகம் 10**

## அத்தியாயம் – 3

## குழந்தை பருவம்

குழந்தை சங்கரன் அந்த வீட்டின் வாசலில் நின்றுகொண்டு 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று வேண்டினான். அந்த வீடு பூர்வ ஜென்ம வினைப் பயனால் ஏழ்மையில் இருந்த ஒரு பிராமணன் வீடு. அன்றாடம் கிடைப்பதைக் கொண்டு வாழ்கிற குடும்பம். அந்த வீட்டின் பிராமணர் வெளியே போயிருந்தார். அவருடைய மனைவி மட்டும் வீட்டில் இருந்தாள். வாசலில் ஒரு குழந்தையின் குரல் கேட்டதும் அந்த பெண்மணி வெளியே வந்து வாசலில் எட்டிப்பார்த்தாள். அந்த தாயைப் பார்த்ததும் சங்கரன் இரண்டாவது முறையாக 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று கேட்டான்.

'பிரும்ம தேஜஸுடன் ஒரு பிரம்மசாரி குழந்தை பிக்ஷை கேட்டு வந்துள்ளானே. இன்று துவாதஸி புண்ணிய காலம். நம் வீட்டில் ஒரு பிடி அரிசி கூட இல்லையே என்ன செய்வேன்? 'இல்லை என்று எப்படி என் வாயால் கூறுவேன்? பகவானே இது என்ன சோதனை? இந்த உத்தமமான பிரம்மசாரிக்கு எதுவும் அளிக்க இயலாத நிலையில் இருக்கிறேனே. இந்த ஜென்மம் இருந்துதான் என்ன பயன்?' என்று அவள் மனம் வருந்தினாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது. அதைக் கண்ட சங்கரன் 'அம்மா ஏன் அழுகிறீர்கள், உங்களிடம் எது இருந்தாலும் பபரவாயில்லை, கொடுங்கள்' என்றான்.

*அந்த அம்மா வேகமாக உள்ளே போய் பிக்ஷை இடுவதற்கு ஏதாவது இருக்கிறதா என்று வீடு முழுவதும் தேடி தேடி பார்த்தாள். ஒன்றும் கிடைக்கவில்லை. சமையல் அறையில் பார்த்தாள். கடவுள் கைவிடவில்லை. துவாதசி விரதத்தன்று சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ள ஒரு நெல்லிக்காயை ஒரு ஜாடியில் எடுத்துவைத்திருந்தது அவளுடைய ஞாபகத்திற்கு வந்தது. அவசர அவசரமாக அந்த உலர்ந்த நெல்லிக்காயை எடுத்தாள். அந்த குழந்தைக்கு இந்த நெல்லிக்காயை அளிக்க அவள் மனம் இடம் தரவில்லை. தயங்கினாள். அதே நேரம் வாசலிலிருந்து மூன்றாவது முறையாக 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று குரல் கேட்டது.*

*(ஒரு வீட்டிற்கு பிக்ஷை கேட்க போகும்போது அந்த வீட்டில் மூன்று முறைதான் 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று கேட்கவேண்டும். அதற்குள் அந்த வீட்டிலிருந்து யாரும் பிக்ஷைபோட வில்லை என்றால் அடுத்த வீட்டிற்குச் சென்றுவிடவேண்டும். இது பிக்ஷை நியதி.)*

*மூன்றாவது முறையாக அந்த குழந்தை குரல் கொடுத்ததும் அந்த தாய் 'ஒன்றும் இல்லை என்று சொல்வதற்கு பதில் இந்த நெல்லிக்காயையாவது கொடுப்போம்' என்று நினைத்து அவசர அவசரமாக அந்த நெல்லிக்காயை தன் புடவைத் தலைப்பால் துடைத்து வாசலுக்கு ஓடி வந்து மிகுந்த தயக்கத்துடன் அவமானம் தாங்கமுடியாமல் கூனிக்குறுகி கண்ணீருடன் அந்த நெல்லிக்காயை சங்கரனின் பிக்ஷைப்பாத்திரத்தில் போட்டாள்.*

*(குசேலன் அழுக்குத் துணியில் கட்டிக்கொண்டுவந்த அவலை பகவான் சாப்பிட்டார் அல்லவா? பாஞ்சாலியின் பாத்திரத்தில் இருந்த ஒரு கீரை இலையை பகவான் சாப்பிட்டதுபோல்)*

*அந்த தாயின் கண்களிலிருந்து கண்ணீர்*

*வருவதைப் பார்த்த சங்கரன் 'ஆஹா இவ்வளவு வறுமை இருந்தும் 'இல்லை' என்று சொல்லாமல் ஒரு சிறிய நெல்லிக்கனியே ஆனாலும் அதை முழுமனதுடன் தானம் செய்தாளே. அவளுடைய மனசு எவ்வளவு விசாலமானது. இது அல்லவோ மிகச் சிறந்த தானம்' என்று நினைத்தான் சங்கரன்.*


*வருத்தமும், இரக்கத்தைத் தூண்டுகிற பரிதாபமும் கலந்த அந்த அம்மாவின் மனநிலையை குழந்தை சங்கரன் உணர்ந்தான். இந்த குடும்பத்தின் வறுமையை போக்கவேண்டும் என்று நினைத்து தன்னுடைய ஹிருதயத்தால் ஐஸ்வர்ய தேவதையான மஹாலக்ஷ்மியை துதிக்கிறார். திசைகளையெல்லாம் ஒளிமயமாகச் செய்தவண்ணம் ஸ்ரீமஹாலக்ஷ்மி சங்கரன் முன் பிரசன்னமாகி 'பாலகனே உன் உள்ளத்தில் இருப்பதை நான் அறிந்துகொண்டேன். ஆனால் இந்த வீட்டு பிராமணர் முற் பிறவியில் நல்ல செயல்கள் எதையும் செய்யவில்லையே. அப்படி இருக்கும்போது என்னுடைய கடாக்ஷத்தை (லக்ஷ்மி கடாக்ஷத்தை) இவர்கள் அடையுமாறு செய்வது எப்படி முடியும்?' என்றாள்.*

*அதைக்கேட்ட சங்கரன் 'தேவி, தாங்கள் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும். இவர்கள் செய்த பாவம் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் தாங்கள் படும் கஷ்டத்திலும் இத்தனை அன்போடு வீட்டில் இருந்த ஒரே நெல்லிக்கனியையும் 'இல்லை' என்று சொல்லாமல் எனக்கு பிக்ஷையாக போட்டிருக்கிறாளே. அந்த தயைக்கு ஈடு ஏது? எனவே இந்த பெண்மணிக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும் தாயே' என்று வேண்டி தேவியை ஸ்துதித்து பாடுகிறார். அந்த ஸ்லோகம்தான்* **'கனகதாரா ஸ்தவம்'** *சங்கரர் பாடிய முதல் ஸ்துதி.*

தொடரும்..

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

# துக்கச் சுமை குறைய வழி



நாம் எல்லோரும் பரம்பொருளைப் பற்றிய உண்மையான ஞானத்தைப் பெற முயல வேண்டும். இந்த ஞானம் என்பது என்ன? பரம்பொருளைத் தவிர, வேறெதுவுமே இல்லை என்பதுதான். அந்த ஒன்று தான் இத்தனையாகவும் தோன்றுகிறது. இத்தனையான தோற்றங்களிலேயே மனசைச் செலுத்திக் கொண்டிருந்தால் சஞ்சலம், ஏற்றத் தாழ்வு இவற்றால் உண்டாகும் கஷ்டங்கள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டேதான் இருக்கும். இத்தனை தோற்றத்திலிருந்தும் மனசைத் திருப்பி, இவற்றுக்குக் காரணமான ஒன்றையே அறியத் தொடங்கினால் எண்ணமும் பலவாக ஓடி அவதிப்படாமல், சஞ்சலங்கள் ஓயும். ஒரே வஸ்து என்ற பின் சஞ்சலிக்கவோ ஏற்றத் தாழ்வுக்கோ இடம் ஏது? அந்த நிலையிலேயே நித்திய சுகத்தைப் பெறலாம். இந்த நிலையைத்தான் ஞானம் என்கிறோம்.

தொடரும்...

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# பலர் சொல் விளைவிக்கும் மனமாற்றம்




சென்றமாத தொடர்ச்சி....

உனக்கென்ன கண் தெரியவில்லையா? உன்னுடைய ஏமாற்று வேலைகளையெல்லாம் என்னிடம் காட்டாதே" என்று உறுதியாகக் கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

சிறிது தூரம் சென்றதும் இரண்டாவது அயோக்கியன் அவரிடம் வந்து 'ஓ சோமயாஜி! உங்களுக்கு என்ன ஆயிற்று? தாங்கள் ஏன் புத்தி ஸ்வாதீனம் இல்லாதவனைப் போல் நடந்து கொள்கிறீர்கள்? உங்களைப் போன்ற மிகவும் ஆசாரமானவர்கள், தெரியாமல் நாயைத் தொட்டாலே உடனே குளித்துத் தங்களை பரிசுத்தம் செய்துகொள்வார்கள். அப்படியிருக்கையில், உங்களுடன் அந்நாய்களை அழைத்துக்கொண்டு செல்வதைப் பார்த்தால், எனக்கு மிகவும் அதிர்ச்சியாக உள்ளது. சே! சே! ஏன் இப்படியெல்லாம் நடந்துகொள்ள உங்களுக்குத் தோன்றுகிறது?" என்று கேட்டான். இதுவரை இரண்டு நபர்கள் தன்னுடைய ஆடுகளைப் பார்த்து 'நாய்கள்' என்று கூறிவிட்டதால், உண்மையிலேயே தான் கொண்டு செல்வபவை நாய்கள்தானோ என்று பெருங்குழப்பம் அவருக்கு ஏற்பட்டது.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்



## அத்தியாயம் 3 : வேதங்கள்

*சென்ற மாத தொடர்ச்சி 3-5 :*

*வர்ணம் எனப்படும் குறிப்பிட்ட எழுத்துக்கள், இராகத்தின் ஸ்வரம், ஓர் எழுத்தை ஒலிக்கும் கால அளவைக் குறிக்கும் மாத்திரை, எழுத்தின் வலிமையை உணர்த்தும் 'பலம்' 'ஸாமம்' எனப்படும் சிறப்பு அமைப்பு, நிறுத்தம் இல்லாமல் தொடர்ச்சியாகச் சொல்ல வேண்டிய 'சந்தானம்' - ஆகியவையே அவை. எடுத்துக்காட்டாக மாத்திரை என்பது, ஒரு மயில், காகம் போன்ற ஒரு பறவை எழுப்பும் ஒலியின் கால அளவாகும். சமீபத்தில் ஒலிப்பொறியாளர்கள், வேத விற்பன்னர்கள், வேதம் ஓதுதலையும் பறவைகளின் இசை ஒலிகளையும் பதிவு செய்திருக்கிறார்கள். ஒப்பு நோக்குகையில் அவற்றின் ஒலி இடைவெளிகள் நானோ நொடிகள் சுத்தமாக ஒத்துப்போவது தெரிய வந்தது. (ஒரு நானோ நொடி என்பது ஒரு நொடியின் 100 கோடியில் ஒரு பகுதியாகும்) அதிலிருந்து நினைவுக்கெட்டாத காலத்திலிருந்து, நாத கம்பீர்யம் மாறாமல் இருந்து வருகிறது என்பது தெளிவாகிறது. வேதங்கள் மனிதர்களால் இயற்றப்பட்டிருந்தால் அது சாத்தியமாகாது. இது தொடர்பான இன்னுமொரு முக்கியமான விஷயம்; வேதங்களில் சில இடங்களில், ஸ்வரம் பொருளைச் சார்ந்துள்ளது.*

*தொடரும்..*

## குழந்தைகள் பகுதி

*அன்பு குழந்தைகளே!!! நலமாக இருக்கிறீர்களா?*

*இது* **“ஆகஸ்ட்”** *மாதம்.* **“ஆகஸ்ட்”** *மாதம் என்றவுடன் உங்களுக்கு ஒரு தேதி ஞாபகத்திற்கு வரவேண்டும்! வருகிறதா? ஆம் அதுதான்* **“ஆகஸ்ட் 15”**.

*நாம் வீடுகளில் எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடுகிறோம். அதேபோல் நம் நாட்டில் கொண்டாடவேண்டிய (பண்டிகை) தினங்கள் இரண்டு (1) சுதந்திர தினம் (2) குடியரசு தினம். இரண்டிற்கும் உள்ள வேறுபாடு உங்களில் எத்தனை பேருக்கு தொரியும்?*

*நம் நாட்டை மன்னர்கள் ஆட்சி செய்தபோது, மக்கள் ஒற்றுமை இல்லாமல் வாழ்ந்துவந்தார்கள். அதனால் ஆங்கிலேயர்கள் எளிதாக நம் நாட்டை கைப்பற்றி நாட்டை ஆளத்தொடங்கினார்கள். நம் நாடு அடிமை நாடாக இருந்தது. அதன்பிறகு பகத்சிங், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், வேலு நாச்சியார், ராணி லக்ஷ்மி பாய், கொடி காத்த குமரன், மஹாத்மா காந்தி, மஹாகவி பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, பண்டிட் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் போன்று இன்னும் ஏராளமான சுதந்திர போராட்ட வீரர்களின் போராட்டத்தால், முக்கியமாக மஹாத்மா காந்தியின் சாத்வீக போராட்டத்தால் இந்தியாவை இந்தியர்களிடமே ஆங்கிலேயர்கள் ஒப்படைத்துவிட்டு 1947, ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியாவை சுதந்திர நாடாக அறிவித்துவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறினார்கள். இந்த நாளைத்தான் நாம் வருடா வருடம் சுதந்திர தினமாக கொண்டாடுகிறோம்.*

*ஆங்கிலேயர்கள் நமக்கு சுதந்திரம் அளித்தபின்னும் மீண்டும் மன்னர் ஆட்சி வந்துவிடக்கூடாது என்பதற்காகவும், மக்களை யார் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை மக்களே*

*தீர்மானிக்கும் முழு சுதந்திரத்தை மக்களுக்கே பெற்றுக்கொடுத்த நாள்தான்* **“குடியரசு நாள்”.** *இதற்கான கோட்பாடுகளை இந்தியா ஏற்றுக்கொண்ட நாள் 1950 ஜனவரி 26. இந்த நாளைத்தான் நாம் குடியரசு நாளாக கொண்டாடுகிறோம்.*

*1947 முதல் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 15-ம் தேதி நாடு முழுவதும் சுதந்திர தினம் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஆகஸ்ட் 15-ம் தேதி டெல்லி செங்கோட்டையில் இந்தியப் பிரதமர் தேசியக்கொடியை ஏற்றி சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துவார். ஒவ்வொரு மாநிலத் தலைநகரங்களிலும் மாநில முதலமைச்சர்கள் கொடியேற்றுவார்கள். அதேபோல் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களும், அரசு அலுவலகங்களில் அதன் உயர் அதிகாரிகளும், பள்ளிக்கூடங்களில் தலைமை ஆசிரியர் அல்லது சிறப்பு விருந்தினர்களும் கொடியேற்றி சிறப்புரையாற்றுவார்கள்.*

*சுதந்திர தினத்தன்று உங்கள் பள்ளிகளிலோ அல்லது வேறு எங்கேயும் தேசிய கொடியை ஏற்றும்போதும் தேசிய கீதம் பாடும்போதும் எழுந்து நின்று ஆடாமல் அசையாமல் அதற்கு மரியாதை கொடுக்க வேண்டும்.*

*தேசப்பற்று என்பது நீங்கள் தாய் நாட்டின் மீது கொண்டுள்ள அன்பும், மரியாதையும் ஆகும். இந்த உணர்வை நீங்கள் வளர்த்துக்கொண்டால் நீங்கள் நாளைய பொறுப்புள்ள குடிமகனாக திகழ்வீர்கள்.*


*இந்த வருடம்* **15.08.2022 திங்கட்கிழமை நாட்டின் 75 ஆவது** *சுதந்திர தினத்தை சந்தோஷத்துடன் கொண்டாடுங்கள். அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள். பாரத மாதாவிற்கு ஜெய்!!!*

*உங்கள் அன்புள்ள :* **“வேதபாரதி” தாத்தா**


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
Contact
9952972436 / 7824807801
www.wopper.in
WOPPER

# வேதபாரதி பெருமை கொள்கிறது

சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ சன்னிதானம் அவர்களின் திருக்கரங்களால் 25.06.2022 அன்று பெங்களூரில் நடைபெற்ற விழாவில் வேதபாரதி **Founder Trustee ஸ்ரீ T.R. ராமநாதன்** அவர்கள் **"ஸ்ரீ பாரதீ தீர்த்த புரஸ்கார்"** விருது பெற்று ஆசீர்வாதம் பெற்றார். வேதபாரதி அமைப்பு பெருமை கொள்கிறது.





# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!**


அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் ஏழைகள் புற்றுநோய் என்றதும் இலவச சிகிச்சை பெற வறுமை - வலி - வேதனையுடன் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை நோக்கி வருகிறார்கள். சென்னைக்கு வந்த பின்பு எங்கு தங்குவது; எப்படி சாப்பிடுவது என்கிற மிகப்பெரிய கேள்விகளுடன் அவர்கள் தவிக்கும் நிலையில், நாங்கள் இருக்கிறோம் என்று அவர்களை இருகரம் நீட்டி அன்புடன் அரவணைத்துக் கொள்கிறது நமது நம்ம தர்மசாலா. ஏழை புற்றுநோயாளிகளுக்கும் அவர்களது ஒரு உதவியாளருக்கும் நமது நம்ம தர்மசாலாவில் சத்தான உணவு - சுகாதாரமான தங்குமிடம் ஆகியவை ஏழை புற்றுநோயாளியின் சிகிச்சை காலம் வரை **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஏழை புற்றுநோயாளிகள் தங்குமிடம்-உணவு பற்றிய கவலை மறந்து தங்களது சிகிச்சையை முழுமையாக பெற்று விரைவில் நலம் பெறுகிறார்கள். ஏழை புற்றுநோயாளி களின் உயிர் காக்கும் இந்த உன்னத சேவைக்கு உதவுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்.



எளிய மக்கள் மீது அளவற்ற அன்பும், அக்கறையும் கொண்டு அவர்தம் துயர் தீர பல்வேறு தர்ம செயல்கள் செய்து வரும் திரு கல்யாணகுமார் மற்றும் அவரது அன்பு மனைவி இருவரும் நமது நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்கிட ரூ.1,00,000/- நன்கொடையினை நமது நிர்வாக அறங்காவலர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் வழங்கி, தங்களை ஸ்ரீ மாதா டிரஸ்டின் நிரந்தர புரவலராக இணைத்துக் கொண்டு மகிழ்ந்தனர். மனிதநேயத்தின் மறு உருவமாக திகழும் இவர்களும் இவர்களது குடும்பத்தினரும் நூறாண்டுகள் நலமுடன் வாழ இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.

---

செங்கல்பட்டு – மாமண்டூர் கிராமத்தில், ஆதரவற்ற ஏழை முதியவர்களுக்காக நாம் செயல்படுத்தவிருக்கும் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு இலவச முதியோர் இல்ல** கட்டிட அனுமதி வழங்குவதற்காக நமது நிலத்தில் துறை சார்ந்த அதிகாரிகளின் நேரடி ஆய்வு நிறைவடைந்துள்ள நிலையில், துறை சார்ந்த அதிகாரிகளின் விண்ணப்பங்களின்படி கட்டிட அனுமதிக்கான கட்டணமாக சுமார் 20 லட்சம் ரூபாய் முறையாகவும், முழுவதுமாகவும் 17.6.2022 அன்று செலுத்திவிட்டு, கட்டிட அனுமதிக்காக இன்றுவரை காத்திருக்கிறோம். அதன்படி, கட்டிட அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் நமது இலவச முதியோர்



இல்ல கட்டிட பணிகள் முழு வீச்சுடன் நடைபெறும். வறுமையில் வாடும் ஏழை முதியவர்களுக்காக **முற்றிலும் இலவசமாக** செயல்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ள நமது முதியோர் இல்ல கட்டிடப் பணிகளுக்கு **ரூ.5,00,000/-** வழங்கும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரில், இம்முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய தொகை வழங்குவோரின் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.

**சிந்திப்பீர்! செயலாற்றுவீர்!!**




**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "**நம்ம தர்மசாலா**"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act.

Sri Matha Trust PAN No. **AACTS9747G**

நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் **"PAN"** நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687

Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647

Regd. Office: "Natha Kamalam", No.1-A, Periazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 600 059. **9500001065 / 9003247857**

**vkrishnamoorthy.smt@gmail.com** **www.srimathatrust.org**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 20

*மாணவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக கல்வி கூடங்களுக்கு செல்ல இயலாமல் வீட்டில் முடங்கி கிடந்து, சில மாதங்களாக மீண்டும் செல்வதால் பல்வேறு மனநிலை சிக்கல்களோடு தான் வகுப்பறைகளையும், ஆசிரியர்களையும் எதிர்கொள்கிறார்கள். இதை எதிர்கொள்வதில் ஆசிரியர்களுக்கு பிரச்சனைகள் பல உண்டு. "மொபைல்" மற்றும் "லேப்டாப்" மூலம் கல்வி கற்று பழகிவிட்ட மூன்று வயது குழந்தை முதல் "ப்ளஸ்டு" மாணவ மணிகள் வரை பள்ளியில் திடீரென்று நேரடி வகுப்புகளை ஜீரணிக்கப்படும் அவதிகளை, அந்த வயதிற்கே உரிய வகையில் வெளிப்படுத்த, அதை ஆசிரியர்கள் சமாளித்து பாடம் எடுக்க பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டனர்.*

*அதே சமயம் கொரோனா காலகட்டத்தில், "ஆன்லைன்" வகுப்பிற்கு பல சிறிய ஊர்களில் சரியான "இன்டர்நெட்" இணைப்பு கிடைக்காமல், படிப்பில் பெரிதும் பின்தங்கிய மாணவ மணிகளும் உண்டு.*

**"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப**
**தன்னுயிர் அஞ்சும் வினை"**

**(அதிகாரம் – 25 குறள் – 244)**

*"கருணை மிகுந்தவன் தன்னுயிரைப் பற்றி பயப்படாமல், உலகத்திலுள்ள மற்ற உயிர்களையெல்லாம் தன்னுயிர் போலப் பாதுகாக்கும்*

*எண்ணத்துடன் பணி புரிவான். எக்காரணத்திற்கும் தன் உயிரைப் பற்றி கவலைப்பட மாட்டான்" என்கிறார் திருவள்ளுவர்.*

*பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள் பலர் அன்றாடம் செய்வதை நாம் பார்த்து அல்லது கேள்விபட்டிருக்கின்றோம். அதுபோன்று செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் பரவலாகப் பேசப்பட்ட இரு ஆசிரியர்களை பற்றி காண்போம்.*

*கர்நாடக மாநிலம், குடகு பகுதியில் "முல்லூர்" என்றொரு கிராமம், சோமவார்பேட்டை அருகில் உள்ளது. பெங்களூருவிலிருந்து 250 கி.மீ. தொலைவில் உள்ள இந்த கிராமத்தில் "இன்டர்நெட்" பெரும் பிரச்சனையாக இருந்தது.*

*அரசுப் பள்ளி ஆசிரியரான, சி.எஸ். சதீஷ் என்பவர், ஒரு மரத்தின் மீது கனமான மூங்கில் அறை போன்று ஒன்றைஅமைத்து ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பாடம் எடுத்தார். தன் கைச்செலவாக ரூ.10,000/- கொண்டு, மூங்கில் பலகைகள், உலர்ந்த வைக்கோல், சாக்கு மூட்டைத் துணிகள் கொண்டு செய்தார். கணக்கு, ஆங்கிலம் மற்றும் கன்னடம் கற்பிக்கும் இந்த ஆசிரியர், இருபதடி உயரத்தில் இதைக் கட்டி, தான் தினமும் அதன் மீதேறி, "மொபைல்" கேமரா முன்பு அமர்ந்து தன் பணியைச் செய்தார். அதுமட்டுமல்ல, பல மாணவர்களுக்கு "ஸ்மார்ட் ஃபோன்" ஏற்பாடு செய்து, "கான்ஃபெரன்ஸ் கால்" மூலமாக பாடம் எடுத்துள்ளார்.*

*இதே போன்று, தார் பாலைவனத்தில் "மொபைல் நெட்வொர்க்" (இணைப்பு) என்பது கடினம் தான். "பார்மர்" மாவட்டத்தில் "பீம்தால்"*

எனும் இடத்தில் அரசுப் பள்ளி மாணவ – மணிகள் (கிட்டதட்ட 700 குழந்தைகள்) கொரோனா சமயத்தில் படிக்க இயலாமல் பள்ளியை விட்டு விலகினர். ஆசிரியர்கள் ஒட்டகத்தின் மீதேறி தினமும் பல கி.மீ. பாலைவனத்தில் பயணித்து மாணவர்களுக்கு நேரடிப் பாடம் எடுத்தனர்.

நான்கு ஆசிரியர்கள், கிராமத்தார் அளித்த இரண்டு ஒட்டகங்களில் 12 கி.மீ. பயணித்து, பாலைவனத்தின் எரியும் வெய்யிலில் 8 கிராமத்து மாணவ மணிகளை ஒருங்கிணைத்து, பள்ளி நடத்தினார்கள்.

ஆசிரியர்கள் “முட்டாள்களாக” சித்தரிப்பது அல்லது “மலர்” டீச்சர் போன்ற“காதல் பார்வை” யைப் போர்த்துவது என்று மட்டுமே சினிமா, சீரியல், “OTT” செய்து வருகிறது. நம் முன்னோர்கள் விட்டுச்சென்ற சொத்துக்களான ஸ்லோகங்களையும், இதிகாசங்களையும் “பணம் பண்ண” “ஆன்லைன்” வகுப்புகள் நடத்தும் இக்காலகட்டங்களில் உண்மையான ஆசிரியர்களை தேடி, வேதபாரதி “ஜூம்” இல் அழைத்து பேச வைக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

தொடரும்..


உ
ஸ்ரீ குருவே சரணம்

**வேதபாரதி**

**வழங்கும்**

**பெண்மையைப் போற்றுவோம்**

**பெண்களால் பெண்களுக்காக நடத்தப்படும் நிகழ்ச்சி**

**பிரதிமாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 6.30 மணிக்கு ஆன்லைன் வழியாக**

**அனைவரும் வருக!**

**மேலும் தொடர்புக்கு : 9443495950**

## சாதனைப் பறவைகள்

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**

# ஸ்ரீ சிவபிருந்தாதேவி — 2-ம் பகுதி

## பாரத தேசத்தின் முதல் பெண் ஆதீனம்



இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு பாராட்டு செய்தியனுப்பியிருந்த ஜனகல்யாண் திரு. சாய்ராம் அவர்களுக்கும், தொலைபேசியில் சிவபிருந்தாதேவி பற்றிய சில சுவாரசியமான விஷயங்களைப் பகிர்ந்து கொண்ட திரு.ஆர்.பி.வி.எஸ்.மணியன் அவர்களுக்கும் என் நன்றிகளைக் கூறிகொள்கிறேன். மணியன் அவர்கள் கூறிய விஷயங்களை தனி கட்டுரையாகவே தருகிறேன்.)

1971-ம் ஆண்டு பிப்ரவரி 12-ம் தேதி. வெள்ளிக்கிழமை பிருந்தா தேவி அம்மையாரின் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனை. அன்று ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விபூதி சாயிபாபா அவர்களை தரிசித்தார். இருவருக்கும் இடையே நடந்த சம்பாஷணைகளின் இறுதியில், கருணையுடன் பார்த்த ஸ்வாமிகள், விட வேண்டியதை விட்டு விட்டால், கிடைக்க வேண்டியது தானாகக் கிடைத்துவிடும்'' என்றார். ஒரு தீர்மானத்தோடு வணங்கி விடை பெற்றார் பிருந்தாதேவி. பிப்ரவரி 14 ஞாயிற்றுக்கிழமை, காவி வஸ்திரம் ஏற்று, துறவறம் மேற்கொண்டு **தவத்திரு சாயிமாதா சிவபிருந்தா தேவியானார்.** அவரது ஆன்மீகச் சேவைகளும், சமூகத் தொண்டுகளும் மிகச் சிறப்பாகத் தொடர்ந்தன. தேவார மூவர்களில் ஒருவரான அப்பர்

அவர்களின் சகோதரரி. திலகவதி அம்மையாரின் பெயராலேயே ஒரு திருமடம் அமைத்து சைவத்தின் பெருமையையும், தமிழின் சிறப்பையும், சமூகப் பணிகளின் மேன்மையையும் ஒருசேரத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான பக்தர்களை தனது சொல்லாற்றலால், அறிவாற்றலால் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார் சாயிமாதா சிவ பிருந்தாதேவி அம்மையார்.

அதே ஆண்டில் இன்னொரு முக்கிய நிகழ்வு என்னவென்றால், சாயிமாதா சிவபிருந்தாதேவி அம்மையாரை சந்திக்கவும், அவர் நிர்வகித்து வந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகளிர் இல்லத்தைக் காணவும் தஞ்சையிலிருந்து பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் வருகை தந்தார். சாயிமாதா பிருந்தாதேவியின் துணிச்சலுக்கு இந்த சந்திப்பு ஒரு உதாரணம். அம்மையார் அவர்கள் எந்தவித தயக்கமுமின்றி பெரியார் அவர்களுக்கு பூரண கும்ப மரியாதை செய்ததுடன், அவரின் நெற்றியில் துணிந்து திருநீறு இட்டார். அதனைத் தடுக்காமலும், பின்னர் துடைக்காமலும் ஏற்றுக்கொண்ட பெரியார் தனது உரையாற்றலின் போது, “அம்மையார் அவர்கள், சாமியார்களை வரவேற்பதைப் போல் என்னையும் வரவேற்று, நெற்றியில் விபூதி பூசிவிட்டார்கள். அது அவரது நம்பிக்கை எனது நம்பிக்கையை அனைவரும் அறிவர். அதுபற்றிப் பேசுவதற்கு இது இடமில்லை. டாக்டர் முத்துலட்சமி அம்மையார் பெயரில் ஒரு மகளிர் இல்லத்தை மிகவும் சிறப்பாக நடைத்திவருகிறார். அவரது சேவையைப் பாராட்டிவிட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவே நான் காசு வாங்காமல் இங்கே வந்தேன்”. என்று குறிப்பிட்டார். **(நன்றி : வரலாறு படைத்த தைவ மங்கையர் – 100” – பேரோசிரியர் பானுமதி தருமராசன்)**

*அதே ஆண்டு, ஜுலை மாதம், தமிழக முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்களும் மகளிர் இல்லத்தைப் பார்வையிட்டு, "அம்மையாரின் நற்பணிகளையும் சேவை மனப்பான்மையையும் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, நன்றாகப் பேசக்கூடிய ஆற்றலை உடையவர், கலைவாணியாகவும், இசைவாணியாகவும் விளங்குவது மேலும் சிறப்பு" என்று பாராட்டியும் பேசிச் சென்றார். பெருந்தலைவர் காமராஜர், திரு.பக்தவச்சலம் ஆகியோரும் இந்த இல்லத்திற்கு வருகை தந்து பாராட்டியது இவரின் சமூகப்பணிகளுக்கு மிகப் பெரிய அங்கீகாரமாகத் திகழ்ந்தது. பதவிகளும் பாராட்டுகளும் இவரைத் தேடி வந்தன. மனிதநேயமும், அக்கறையும் மிகுந்த இவரது சமூக சேவைகளைப் போற்றும் விதமாக 1972-ம் ஆண்டில் மாவட்ட சமூக நலத்துறைத் தலைவியாக தமிழ்நாடு ஆளுனரால் நியமிக்கப்பட்டார். ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பதவி காலத்தில் சிறப்புடன் பணியாற்றி, அரசுக்கு நல்ல பல ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.*

*அனைத்துக்கட்சித் தலைவர்களையும், பொது மக்களையும் தன் சீரிய நோக்கங்களால், தெளிந்த சிந்தனைகளால், திட்ட மிட்ட செயல்களால், நேர்கொண்ட கருத்துப் பரிமாற்றங்களால், ஆன்மீக அறிவாற்றலால், நேர்மையான சமூகத் தொண்டுகளால் ஈர்த்த தவத்திரு பெண்மணியாகத் திகழ்ந்தவர் ஸ்ரீ சாயிமாதா சிவபிருந்தாதேவி அம்மையார் என்பது புதுக்கோட்டைக்கு மட்டுமல்ல, இந்த பாரத தேசத்தின் பெண்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கின்றவிஷயம். சிவபிருந்தாதேவி அவர்கள்* **முதல் பெண் ஆதீனகர்த்தர்** *என்றபெருமைக்குரியவரான விவரங்களைத் தொடர்ந்து பார்ப்போம்.*

*அடுத்தும் சிவபிருந்தாதேவியை சிந்திப்போம்...*

# லண்டன் பயணம்

சென்றமாத தொடர்ச்சி.....

நடந்து, அலைந்து திரிந்ததில் ஏதாவது கிடைக்குமா என கண்கள் தேட ஆரம்பித்தது. எந்தப் பக்கம் பார்த்தாலும் - -- அல்லது சைனீஸ், ஜப்பானிய உணவகங்கள், ப்ரெட் சாப்பிட கூடாது என கங்கணம் கட்டியிருந்தாள். இந்திய உணவகம் இருக்கும் இடம் இன்னும் வெகு தொலைவில் இருந்தது. ஜெனிபருடன் உரையாடிக் கொண்டே --- பார்த்துவிட்டு வெளியே வந்தால் ஃபோன் ஒலித்தது. தெரியாத நம்பர் யாராக இருக்கும் என எடுத்தால் 'ஹலோ நான் செந்தில் பேசறேன், ஞாபகம் இருக்கா" பானுவுக்கு யாரென விளங்கவில்லை.

"அன்று விஷால் வீட்ல பூஜைல பார்த்தோமோ"

'ஓ சரி சரி சொல்லுங்க" ஏன் இந்த நரசிம்மராவ் கூப்பிடுகிறார் என நினைத்துக் கொண்டாள்.

'நீங்க எங்க வீட்டுக்கு அவசியம் வரணும், அடுத்த வாரம் இந்தியா திரும்ப போறீங்கனு விஷால் சொன்னார், இருங்க என் வைஃப் உங்களோட பேசணுமாம்.

செந்திலின் மனைவியின் பெயர் வானதி. அவருக்கு அப்படியே எதிர்மாறாக வெறும்ஃபோன் பேச்சிலேயே வானதியுடைய சிரிப்பும், உற்சாகமும் வெகு நாட்கள் பழகியவரைப் போன்ற ஒரு நட்புணர்வும் வந்தது.

வானதியை சந்திக்கவாவது அவர்கள் வீட்டிற்கு போக வேண்டும் என முடிவு செய்தாள். எதுவும் சாப்பிடாமல் கால்கள் துவண்டு போயிருந்தது. பிரண்வுட் ஸ்டேஷன் அடைந்தவுடன் செந்தில் காரில் வந்து அழைத்துக் கொண்டார். அன்றைக்கு மாறாக

லேசாக புன்னகைத்தார். பிரிட்டிஷ் காட்டேஜ் போன்று சின்னதாக அழகான ஒரு வீடு. சினிமாவில் காண்பது போல் வீட்டிற்கு பின்புறம் ஓர் ஓடை, இன்னொரு பக்கம் பரந்து விரிந்த புல்வெளி.

நன்கு அறிமுகமான ஒருவரைப் போல வானதி ஒரு க்ஷணம் ஓயாமல் பேசிக் கொண்டே இருந்தாள். பானுவிற்கு வெகு நாட்களுக்குப் பிறகு தொடர்ந்து தமிழ் பேசியது மனதிற்கு ரம்யமாக இருந்தது.

சிறிது நேரம் பேசிவிட்டு சாப்பிட அழைத்தார்கள், மேசை மீது பார்த்தால் இட்லி, தோசை, பூரி, சாம்பார், சட்னி, கிழங்கு என வகை வகையாக உணவு. பானுவிற்கு கண்ணில் நீர் வராத குறைதான். பசியுற்றவனுக்கு உணவு கிடைத்தாலே பெரிது. அதிலும் சுவையான வேண்டிய உணவு இதைப் போன்று கிடைப்பது அரிய இன்ப விபத்து. வயிறு நிறைந்ததில் மனதார அவர்களை வாழ்த்தினாள் பானு.

‘இவ்வளவு சுவையாக நான் இங்க இருந்த இரண்டு மாதத்தில் சாப்பிடவே இல்லை. ரொம்ப திருப்தியா இருந்தது. ஆமா நீங்க எந்த ஊர்? சொல்லவே இல்லையே.

‘நான் ஆத்தூர்.. உங்களுக்கு தெரியுமா? சேலம் பக்கத்தில இருக்கு”

நானும் அதே ஊர் தான் என பானு ஏனோ அவர்களிடம் சொல்லவில்லை. பானுவிற்கு இது எப்படி விசித்திரமா, தற்செயலா எனவும் புரியவில்லை. முதன்முறை ஏற்பட்ட சந்திப்பிற்கு மாறாக செந்திலும் பின்பு மிக நல்ல நண்பராக மாறிப் போனார். லண்டன் சென்று வந்த பானு எதை மறந்தாலும் வானதியையும், மிக முக்கியமாக அமிர்தம் போல கிடைத்த உணவையும் இன்றளவும் மறக்கவில்லை. (முற்றும்).

# ஸ்ரீ மணவாள மாமுனிகள்

**(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)**

*ஸ்ரீ இராமாநுஜரின் மறு அவதாரம் எனப் போற்றப் பெறுபவர் ஸ்ரீ மணவாள மாமுனிகள்! இவர் பாண்டிய நாட்டில் முதுகுளத்தூர் அருகில் உள்ள சிக்கல் கிடாரம் என்னும் ஊரில் விஜய வருஷம், ஐப்பசி மாதம், திரு மூல நாளில் திகழன் கிடந்த அண்ணர் - ஸ்ரீ ரங்கநாச்சியார் என்னும் தம்பதிருக்குத் திருமகவாய் உதித்தவர்.!*

*இவர் திருவாய் மொழிப்பிள்ளையிடம் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களையும், ஈடு முதலியவற்றையும் கற்றறிந்தார்!*

*கிடாம்பி திருமலை சுவாமியிடம் ஸ்ரீ பாஷ்யம் முதலிய இரகசியக் கிரந்தங்களையும் கற்றறிந்தார்!*

*சகல சாத்திர வித்தகராகிய இவருக்கு 'விசதவான் சிகாமணி!" என விருது கிடைத்தது. திருவரங்கத்தையே இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தவர் இவர்!*

*அரங்கன் திருவாய் மொழியன் உரையாகிய ஈட்டை விவரமாகத் தன் சந்நிதியிலேயே பெரிய திருமண்டபத்தில் உபந்நியாசம் செய்யுமாறு அர்ச்சகர் வழியே கட்டளையிட்டான்! அதன்படி திருவாய் மொழியின் அகல உரையாகிய ஈட்டினை மாமுனிகள் அழகாக விரித்துரைக்கும் பொழுது சீடர்களல் ஒருவனான அரங்கனே அமர்ந்து, மாமுனிகளை ஆசானாக ஏற்று அவர் கூறும் அரும் பொருள்களைக்கேட்டு, ஆனந்தமடைந்தான்! இவ்விதம் தன் சந்நிதியில் ஓராண்டுக்காலம் எல்லாத் திருவிழாக்களையும் நிறுத்திவிட்டுத் தானே சீடனாய் அமர்ந்து, திராவிட வேதசாரமாகிய திருவாய் மொழியின் செழும் பொருளைக் கேட்டு இன்புற்று*

முடிவில் சாற்றுமுறை நாளன்று, 'ஸ்ரீ சைல தயா பாத்திரம்'' எனத் தொடங்கும் அழகிய தனியனை மாமுனிகள் பற்றி அருளிச் செய்தான்!

இன்றைக்கும் திருவாய் மொழியின் செழும்பொருளைக் கேட்டுப்பக்தர்கள் பரவச மடைவதற்கு, முற்றிலும் ஸ்ரீமணவாள மாமுனிகளே காரணமாகும்! இதனை அப்பிள்ளார் கூறும் பாடல் மூலம் அறியலாம்.

“சேற்றுக் கமல வயல் சூழ் அரங்கர்
தஞ்சீர் தழைப்ப
போற்றித் தொழு நல்ல வந்தணர்
வாழவிப் பூதலத்தே
மாற்றற்ற செம்பொன் மணவாள
மாமுனி வந்தில னேல்
ஆற்றில் கரைத்த புளியல்லவோ
தமிழா ரணமே!''

இவ்விதமே கோயில் கந்தாடை அண்ணன், “ஸ்ரீ மணவாள மாமுனிகள் அவதாரம் செய்யாதிருந்தால் கடலோசையைப் போல திருவாய் மொழியும் பொருளின்றிப் போயிருக்கும்!'' என்று கூறியுள்ளார்.

ஈடு வியாக்கியானத்தை விளக்கமாக உபதேசித்து அரங்கநாதனாலேயே முப்பத்தாறாயிரப் பெருக்கர்! என்னும் பட்டப் பெயரையும் பெற்றவர்!

ஸ்ரீ ராமானுஜரை வணங்கி இராமானுச நூற்றாந்தாதியை ஓதி அவன் அடியார்களோடு கூடியிருப்பவர்க்கு மோட்சம் நிச்சயம் உண்டு என்று தாம் இயற்றிய ஆர்த்திப் பிரபந்தத்தில் மிக அழகாகக் கூறியுள்ளார்.

தொடரும்...

# "இல்லந்தோறும் விட்டலன்"

*காஞ்சி ஆச்சார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி நாடெல்லாம் நாமம் என்றபெயரில் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பகவான் நாம சங்கீர்த்தனம் செய்யும் "நாம பிரச்சார யாத்திரையை" செய்து வருகிறார் கடையநல்லூர் ஸ்ரீ ராஜகோபால்தாஸ் பாகவதர்.*

*அதன் ஒரு பகுதியாக வேதபாரதியின் ஏற்பாட்டில் புதுச்சேரியில் "இல்லந்தோறும் விட்டலன்" என்றபெயரில் கடந்த 05.07.2022 செவ்வாய்கிழமை முதல் 12.07.2022 செவ்வாய்கிழமை வரை ஒரு வாரத்திற்கு நாம பிரச்சாரம் நடைபெற்றது.*

*ஒரு நாளைக்கு மூன்று வீடுகள் என மொத்தம் 18 வீடுகளில் நடைபெற்றது. ஹிந்து தர்மமும் நமது கலாச்சார பண்பாடும் பொலிவு குன்றாமல் இருக்கிறது என்பதனை இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் மூலம் அவரவர் வீடுகளில் ஏற்பாடு செய்திருந்தவர்கள் மூலம் புலப்பட்டது.*

*அவரவர் இல்லங்களிலும் நாம சங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என விருப்பம் தெரிவித்தவர்களின் அனைவரின் ஆசையை காலக் குறைவின் காரணமாக நிறைவேற்ற முடியவில்லை என்றாலும் ஒருவாரம் என்பதை இன்னும் அதிக நாட்கள் ஏற்பாடு செய்ய அடுத்தாண்டிற்கான திட்டத்தை வேதபாரதி யோசித்து வருகிறது.*

*மக்களிடம் உள்ள ஆர்வமும், நமது பாரம்பரிய நிகழ்ச்சிகளில் அவர்களின் ஈடுபாடும் வேதபாரதி செய்துவரும் கலாச்சார பண்பாட்டு பணிகளுக்கு கிடைத்துவரும் அங்கீகாரமாகும்.*

**-ஆதிரையன்.**

**பசு - சர்வரோக நிவாரணி**

*1978 ஆம் ஆண்டின் மத்திய அரசின் சட்டப்பிரிவுகளைக் காண்போம்.*

**பிரிவு – 47 (அ) :** *மாடுகளுக்கு தொற்று இல்லை என்பதையும், தொடர் நோய் இல்லை என்பதையும் நிருபிக்கும் வகையில் பரிசோதிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழை மருத்துவரிடம் பெறவேண்டும். (ஆ). சான்றில்லா மாடுகளை வாகனத்தில் ஏற்றக்கூடாது மற்றும் வாகனத்தில் ஏற்றுவதை வாகன உரிமையாளர் மறுக்கலாம்.*

*(இ) நோய் தடுப்பூசி போடப்பட்டு அவற்றிற்கான சான்றினை தகுதி பெற்ற மருத்துவரிடமிருந்து படிவம் –* E (Specified form Schedule – E) *மூலமாக பெற்றிருக்க வேண்டும்.*

**பிரிவு – 48 :** *மாடுகளை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு வாகனத்திலும் முதலுதவிக்கான மருந்துகளும் மருத்துவ உபகரணங்களும் இருக்க வேண்டும்.*

**பிரிவு 49 (அ) :** *ஒவ்வொரு வாகனத்திலும், மாடுகளை அனுப்புபவர் மற்றும் பெறுபவர்களின் பெயர், முகவரி, தொடர்பு எண் போன்ற விபரங்களுடன், மாடுகளின் வகைகள், எண்ணிக்கை அவற்றிற்கு கொடுக்கப்பட்ட உணவு, தீவனத்தின் அளவு போன்றவிபரங்களை சிவப்பு நிறபெரிய எழுத்தால் எழுதப்பட்ட விபர பலகை / காகிதம் ஒட்டப்பட வேண்டும்.*

*(ஆ) பெறுபவருக்கு வாகனத்தின் விபரங்கள், அதில் கொண்டு செல்லப்படும் மாடுகள் பற்றிய விபரங்கள், தோராயமாக சென்றடையும் நேரம் போன்றவற்றை முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.*

**பிரிவு 51 :** *வாகனத்தின் மாடுகள் நிறுத்துவதற்கான கீழ் பலகை மற்றும் அவற்றைகட்டுவதற்கான கயிறு*

*ஆகியவை மாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் மிருதுவானதாகவும், பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும்.*

**பிரிவு 52 :** *வாகனத்தில் ஏற்றுவதற்கு முன்னர் தேவையான அளவு உணவு / தீவனம் மற்றும் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

**பிரிவு 53 :** *கன்று ஈன்றுவதற்கான சூழலில் உள்ள அதிகமாத சினை மாடுகளை மற்ற மாடுகளுடன் ஏற்றக்கூடாது. மற்றும் அதிக கவனத்துடன் தனியாக கொண்டு செல்ல வேண்டும்.*

**பிரிவு 54 (1) :** *பயணப் பாதையில் மாடுகளுக்கு தேவையான தண்ணீர் ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும். அவசரத் தேவைக்கு வாகனத்தில் தேவையான அளவில் தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும்.*

*(2) தேவையான அளவிற்கு தீவனம் கொண்டு செல்ல வேண்டும்.*

*(3) புறப்படுவதற்கு முன் போதுமான ஏற்பாடுகள் பற்றி முறையான ஆய்வு செய்வதை உறுதிப்படுத்த வேண்டும்.*

*பிரிவு – 56 (அ) : மாடுகள் பாதுகாப்பாக செல்வதற்கு வாகனத்தின் சுற்றுப்புறங்களில் உள்ள கட்டைகளில் அடிபடாதவாறு மிருதுவான அட்டை போன்ற பொருட்களை வைத்து திணிக்கப்பட்ட பிரத்யேக ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும்.*

*(ஆ) வாகனத்தின் தரைப்பகுதி வழுக்காதவாறு மரப்பலகையும் அதன்மீது தென்னைநார் (பாய்) விரிப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*(இ) சரக்கு ஏற்றிச் செல்லும் சாதாரண வாகனத்தில் 6 மாடுகளுக்கு கூடுதலாக ஏற்றக்கூடாது.*

**- ஆதிரையன்**

## லிகித ஜபம்

இறைவனின் பேரருளை பெற பல்வேறு மார்க்கங்களை நம் புராணங்களிலும், சாஸ்த்தரங்களிலும் கூறப்பட்டு இருந்தாலும் தற்போதைய அவசர உலகில் நேரமின்மை, மற்றும் பல அலுவல்கள் என்ற போர்வையில் நாம் பல வழிபாடுகளை மெது மெதுவாக இழந்து அல்லது தவிர்த்து வருகிறோம். இதனாலோ அல்லது வேறு பல சூழ்நிலைகளாலோ மன உளைச்சல், பலவித நோய்கள், குடும்பத்தில் குழப்பங்கள் என்று எங்கு நோக்கிலும் மனித குலம் அவதிப்பட்டுக் கொண்டு வருகிறது. இத்தகைய அவதிகள், சீற்றங்களிலிருந்து நம்மை காத்துக் கொள்ள பகவானும் அவ்வப்போது நமக்கு நல் உபாயங்களை காட்டிக் கொண்டு தான் வருகிறார். அதில் ஒன்று நாம ஜாபம் மிகப் பிரபலமாகவும், சக்தி வாய்ந்தும் ஆன ‘ராம’ ஜபம் எழுதுவது நம்மில் நிறைய பேருக்கு தினப் பழக்கமாக இருக்கலாம். அதுபோலவே மற்றுமொறு சிறந்த ஜபம் தான் “நாமத்ரய ஜபம்” உண்மையில் இது நம்மை காக்கும் ஒரு அஸ்தரம் (ஆயுதம்) தீய நோய்களையும், எதிர்மறை சக்திகளையும் எதிர்த்துப் போராடும் ஒரு மாபெரும் அஸ்தரமாக இந்த ஜபம் செயல்படுகிறது. அதாவது பாதுகாக்கிறது. ஜயம் கொடுக்கும் இந்த ஜபம் எழுதுவது வெகு எளிமை.

**அதி சக்தி வாய்ந்த வார்த்தைகளாகவது :**

**அச்யுதாய நம : அனந்தாய நம : கோவிந்தாய நம :**

இந்த லிகித ஜபம் எழுதி பயன்பெற்றவர்கள் ஏராளம். தங்கள் குடும்ப முன்னேற்றத்திற்கு, திருமணங்களுக்கு, நோய்களிலிருந்து விடுபட மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த புத்தகம் இலவசமாகவும் வழங்கப்படுகிறது.

இந்த லிகித ஜெப புத்தகம் வேண்டுவோர் அனுகவேண்டிய **தொலைபேசி எண்.9345725265.**

★ அடக்க விலை ரூ.30/- பணம் கொடுக்க விரும்புபவர்கள் G-Pay No.9345725265 என்ற எண்ணில் அனுப்பலாம்.

# வேதபாரதியின் பெண்மையை போற்றுவோம் நிகழ்ச்சி 2022

வேதபாரதி அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்மையை போற்றுவோம் (யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்) எனும் நிகழ்ச்சியானது கடந்த 17.07.2022 ஞாயிறு அன்று சென்னை துரைப்பாக்கம் ECR ரோடு APL குளோபல் பள்ளி வளாகத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. இதில் சென்னை மற்றும் புறநகரங்களில் உள்ள பள்ளிகளில் இருந்து பல்வேறு வகுப்புகள் படிக்கும் பெண் குழந்தைகள் இவ்விழாவிற்கு வந்திருந்தனர். விழாவின் துவக்க நிகழ்ச்சியாக திருமதி.நீலா முரளிதரன் அவர்கள் தலைமையில் ஸ்திரிகள் தனது பொற்கரங்களால் குத்து விளக்கு ஏற்றப்பட்டு தேச பக்தி பாடலுடன் விழா இனிதே தொடங்கியது.

திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனை அடுத்து யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கத்தை சிறப்பான முறையில் நடத்தி வரும் பெண் குழுவினர் தங்களை அறிமுகம் செய்து கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக மாதந்தோறும் வெவ்வேறு தலைப்புகளில் காணொளி காட்சிகள் மூலம் நடைபெற்றஅனைத்து நிகழ்ச்சிகளின் தொகுப்பை சின்ன திரையின் மூலம் விளக்கினார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண் குழந்தைகள் வகுப்பு / வயது வாரியாக பல்வேறு குழுக்களாக பிரிக்கப்பட்டு கலந்தாய்வு மற்றும் சிறு சிறு போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டன. அதே நேரத்தில் பெற்றோர்களையும் குழுக்களாக பிரிக்கப்பட்டு நமது கலாச்சாரம், பண்பு, குழந்தைகளின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு மற்றும் வேதபாரதி அமைப்பின் செயல்பாடுகள்

*குறித்தும் மிகவும் சிறப்பாக விளக்கப்பட்டது. மதிய உணவிற்கு பின் திரு.கிருஷ்ண ஜெகந்நாதன் ஜி அவர்கள் "பாரதி கண்ட புதுமைப்பெண்" என்றதலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடத்தினார்கள்.*

*இந்நிகழ்ச்சியானது குழந்தைகளிடையே மிகவும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. இதனை அடுத்து இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்துவதற்கு வழிகாட்டிகளாக விளங்கும் டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன், திருமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி, திருமதி.கலைவாணி, திருமதி.பூர்ணிமா மற்றும் திருமதி.காந்தாமணி நாராயணன் அவர்களுக்கு ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகளால் கோயில் பிரசாதம் மற்றும் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.*

*டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமி நாதன் இந்நிகழ்ச்சி குறித்து கூறுகையில் நமது பாரத நாட்டின் 75-வது சுதந்திர ஆண்டு நிறைவை ஒட்டி நம் பாரத தேசம் சுவாச காற்றின் 75-ம் ஆண்டு என்றதலைப்பில் திரு.கிருஷ்ண ஜெகந்நாதன் ஜி அவர்களின் ஒவ்வொரு வாரமும் பல்வேறு தேசத் தலைவர்களின் வாழ்க்கை பற்றி காணொலி காட்சி மூலம் நடைபெற்றநிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து மிக விரைவில் சிறப்பான ஒரு புத்தகம் வெளியிட உள்ளதாகவும் கூறினார்கள்.*

*அதனை அடுத்து சிறப்பு விருந்தினர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், துணைவேந்தர் டாக்டர்.சுதா சேஷையன் MS அவர்கள் சிறப்புரை ஆற்றும்போது, நமது பாரத நாட்டின் கலாச்சாரமானது பல நூறு ஆண்டுகளாக நமது முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த ஒவ்வொரு பழக்க வழக்கங்களும் அறிவியல் சார்ந்த ஆக்கபூர்வமானவை என்பதனை நமது புராண இதிகாசங்களைக் கொண்டு*

மிகவும் அழகாக விளக்கினார்கள். திருச்சி திரு.சந்திர சேகர் அவர்கள் அவ்வப்பொழுது சிறிய சிறிய விளையாட்டுக்கள் மூலம் குழந்தைகளை உற்சாகப்படுத்தி சில போட்டிகளுக்கும் ஏற்பாடு








செய்து பரிசுகளும் வழங்கப்பட்டது.

வேதபாரதி அமைப்பின் சார்பாக பல்வேறு இடங்களில் இருந்தும் பொறுப்பாளர்கள் வந்திருந்து இவ்விழாவினை சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் 150க்கும் மேலான குழந்தைகளும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் நடைபெற்ற அவரவர் கருத்துக் கணிப்பில் பலரும் பல்வேறு நல்ல ஆக்கப்பூர்வமான கருத்துக்களை தெரிந்து கொண்டதாகவும், இதற்கு முன்பாக இது போன்ற எந்தவித நிகழ்ச்சிகளிலும் இதுவரை கலந்து கொண்டதில்லை என்றும், வருங்காலங்களில் இது போன்ற வேதபாரதி அமைப்பு நடத்தும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் அவசியம் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவித்துக் கொண்டனர்.

பெண்மையை தெய்வமாக போற்றும் இப்பாரத திருநாட்டில் அம்மனுக்கு உகந்த ஆடி மாதம் முதல் நாளில் இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மிகவும் மனநிறைவு அளித்ததாக சிலரும் கூறினார்கள். அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. விழாவின் இறுதியில் MS சுப்புலட்சுமி அம்மையார் பாடிய **“மைத்ரீம் பஜத”** என்ற சமஸ்கிருத பாடலுடன் விழா இனிதே நிறைவுற்றது. இப்பாடலை அரங்கமே அதிரும் அளவிற்கு குழந்தைகள் அனைவரும் ஒரு சேர பாடியது அனைவருக்கும் மிகுந்த ஆனந்தத்தை அளித்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெற்றோர்களுக்கு ஸ்ரீமதி காந்தலக்ஷ்மி சந்திரமௌலி எழுதிய “பெற்றோர்களே கவனியுங்கள்’’ என்றபுத்தகமும் சிறுவர்களுக்கு இனிப்பும் வழங்கப்பட்டது. விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஆசிரியர்.

## ஸ்ரீ சங்கர ஜயந்தி விழா 2022

மே மாதத்தில் ஆன்லைன் வழியாக ஸ்லோகம் ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. ஆதிசங்கரர் ஸ்லோகங்களை கடந்த இரண்டு ஆண்டுகளாக மதுரை ஸ்ரீமதி நீலா முரளிதரன் அவர்கள் வேதபாரதி குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்து வருகின்றார்கள். அதிலிருந்து குழந்தைகள் ஸ்லோகம் சொல்ல பதிவு செய்து அனுப்பி வைத்து பங்கு பெற்றார்கள். பெற்றோர்கள் மிக ஆர்வமாக பங்கெடுத்து உதவி செய்தார்கள்.

76 குழந்தைகளுக்கு வேதபாரதி சார்பில் பாராட்டு சான்றிதழ், பயனுள்ள புத்தகம், டாலர் பரிசு ஆகியவைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. போட்டிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

## வாசகர் கடிதம்

1. வேத பாராயணம் எல்லோரும் அக்கறையா ஸ்பஷ்டமா ஸ்வரத்தோட சொன்னா கேட்க அருமையா இருந்தது. குருஜியோட இருந்து அனுபவிச்சமாதிரி இருந்தது. அவருடைய விருப்பத்தை சிரத்தையோட வேதபாரதியை சேர்ந்த நீங்கள் அனைவரும் பக்தியுடன் நிறைவேற்றிண்டுருக்கேள். அனைவருக்கும் என் நமஸ்காரங்கள். நன்றி.

**- ஸ்ரீ ராமதாஸ், ஆதம்பாக்கம்.**

---

2. இன்றைக்கு மாறி வரும் கலாச்சாரமும், சினிமாக்களும் ஆண்களையும், பெண்களையும் மிகவும் பாதித்த நிலையில் தங்களின் இந்த நிகழ்ச்சி உபயோகமாக இருந்தது. பெற்றோர்களே நம் தமிழ் கலாச்சாரம் மீறி நடக்கும் போது நம் பிள்ளைகளும் நம்மை தொடர்ந்து அவர்களும் இன்றைய ட்ரண்டுக்கு மாறிவருகிறார்கள். தங்களின் சேவை மக்களுக்கு தேவை. தங்களின் சேவை தொடர வாழ்த்துக்கள்.

**ஸ்ரீ சிவராமகிருஷ்ணன், ஆங்கரை**



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)

பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646**; ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்

71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,

அடையாறு, சென்னை - 600 020.

Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

*ஸ்ரீ குருப்யோ நம:*

# வேதபாரதி அமைப்பின் வழிகாட்டும் குருவான பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் 3வது ஆராதனை விழா



*சென்னை மந்தைவெளி – அபிராமபுரம் ஸ்ரீ சங்கர குரு குலத்தில் 24.07.2022, 25.07.2022 இரண்டு நாட்கள் வேதோக்தமாக மிகவும் நேர்த்தியாகவும், சிரத்தையாகவும் நடைபெற்றது.*

*24.07.2022 காலை முதல் 11.30 மணி வரை வேதபாரதி வேதவகுப்பு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ மகாலிங்கம் அவர்கள் ஒருங்கிணைத்து 35 பேர்கள் மூன்று வேதங்களையும் பாராயணம் செய்தார்கள்.*

*வேத வகுப்பில் பயிலும் வித்யார்த்திகள் மிக நன்றாக ஸ்வாமிகளுடைய ஆராதனை நிகழ்வில் வேத சமர்ப்பணம் செய்வதை பாக்யமாக கருதினார்கள்.*

*மயிலாப்பூர் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ மணி ட்ரவிட் சாஸ்திரிகள் குரு மஹிமை உபன்யாசம் செய்தார்கள். மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் பிராமண தர்மம், ஏகாதசீ உபவாசகம் குறித்தும் ஸ்வாமிஜியின் கீர்த்திகள் பற்றியும் பேசினார்கள். விழா வேதபாரதியின் குருஜிக்கள் முன்னிலையிலும், ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள் முன்னிலையிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.*

*எல்லா சேவார்த்திகளுக்கும் காலை கஞ்சி மற்றும் மதிய ஆஹாரம் மிக ஆச்சாரமாக தயார் செய்து*

வழங்கப்பட்டது.

25.07.2022 திங்கள் காலை துவாதசி திதியில் ஸ்வாமிகளுக்கு திரிவேத பாராயணம் வேத பண்டிதர்களை கொண்டு வேத சமர்ப்பணம் செய்யப்பட்டது. 10 வேத விற்பன்னர்கள் தொடர்ந்து மூன்று வேதங்களையும் பாராயணம் செய்து, ஷோடசோ உபசார பூஜைகள் செய்து, ஸ்வாமிகளுக்கு புஷ்பாஞ்சலி செய்தார்கள்.

எல்லோருக்கும் ஆகாரம் ஏற்பாடு சிறப்பாக செய்யப்பட்டது. இடம் கொடுத்து உதவி செய்த ஸ்ரீ சந்திரசேகர் மாமா, வேதபாரதி தன்னார்வ உறுப்பினர்கள், ஸ்வாமிகளின் மீது அளவற்றமரியாதை உள்ள நம் உறுப்பினர்கள் அனைவரும் நலமுடன் வாழ

வேதபாரதி அமைப்பின் தன்னார்வலர் ஸ்ரீ ஸ்ரீனிவாசன் (அரசாங்க பணி ஓய்வு). நீண்ட கால நல்லுள்ளம் கொண்ட நல்ல தன்னார்வலர். ஸ்ரீநிவாசன் மைத்துனர் ஸ்ரீ வேங்கடத்தான் தனது உடல்நிலை சூழ்நிலை கருத்தில் கொண்டு முதியோர் இல்லங்களில் வேதபாரதி அமைப்பின் மூலம் சேர்த்து பராமரிப்பு செய்து வந்தனர். ஸ்ரீ வேங்கடத்தான் சென்றமாதம் பெருமாள் திருவடி சேர்ந்தார். இந்நிகழ்வில் புதுவை பொறுப்பாளர் ஸ்ரீ Er. ரமேஷ், அட்வகேட், பட்டாபிராமன் இருவரும் மிகுந்த சிரத்தை எடுத்து மிகவும் சிரமமான பணியை சிரமேற்கொண்டு அந்திம காரியங்களை நிறைவேற்றினர். வேதபாரதி ஸ்ரீனிவாசன் குடும்பத்தினர் மிகுந்த நன்றியோடு வேதபாரதிக்கு பதிவு செய்துள்ளார்.

மனித நேயம் தொடர ப்ராத்திப்போம்.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

**Communication Address : S. SREEDHAR, Poomalai Gopinath Blossoms, Villa 3A, Govindan Nagar Main Road, Palavakkam, Chennai - 600041.**
**Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071**
**Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org**



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*

*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**

# இமைப் பொழுதில்
# கண் முன்
# உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்ப்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

## சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078

Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th August 2022




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரீக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.